17th March 1966]

' . . . The plea of accused 1 and accused 2 is voluntary. Hence, I accept their plea, find accused 1 and accused 2 guilty under Sections 457 and 380 of the Indian Penal Code and convict them . . .' என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கன்விக்ஷன் கூட 'Probation Offenders Act' பிரகாரந்தான். மற்றவர்களுக்கு ஆறு வாரம் தண்டனை கொடுத்திருக்கிறார்கள். இந்த விதமாகத் தான்புறுத்தப்பட்டார் என்றால் அதைப் பற்றி அப்போதே கோர்ட்டில் தெரிவித்திருக்க வேண்டும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : அமைச்சர் அவர்கள் படிக்கும் போது 457-வது செக்ஷனை மட்டுந்தான் சொன்னார்கள். அதிலே, களவு போகாமல் களவு செய்ய முயற்சித்ததற்காக தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : 380 செக்ஷன் என்றும் படித்தேன்.

திரு. மு. கருணாநிதி : அந்தக் குற்றவாளிகளின் பெயர்களை அறிவிக்க முடியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : வெள்ளச்சாமி, சங்கரன் இரண்டு பேர்.

*318 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சியிலுள்ள தொழிற்பேட்டையில் புதிதாக தொழிற் கூடங்கள் கட்டப்பட்டனவா ?

(இ) ஆமெனில், அவைகள், யார் யாருக்குக் கொடுக்கப்பட்டன ?

(உ) அந்தக் கூடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வாடகை விகிதம் என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Seven additional Units are under construction in the Industrial Estate Tiruchirappalli.

(b) They have been allotted to—

(i) Government Regional Press.

(ii) Messrs. Lamina Industries.

(iii) Naan Foundry.

(iv) Messrs. Espee Engineering Works.

(v) Messrs. Madras Rubber Industries.

(vi) Messrs. Texjay Industrial Corporation.

(vii) Messrs. Standard Electronics and Radio Industries

The Units have not yet been occupied by the allottees.

[17th March 1966

(c) The existing rate of subsidised rent for units in this Industrial Estate is 10 paise per mensem per square foot.

திரு. து. ப. அழகமுத்து: இந்தத் தொழிற் பேட்டையில் உள்ள கட்டடங்களுக்கு வாடகை அதிகமாக இருக்கிறது. ஆகவே, அதிலே தொழிலை நடத்த முடியவில்லை என்று தொழில் நடத்து பவர்கள் கூறுகிறார்கள். அதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அவர்கள் சொல்வது நியாயம் அல்ல. காரணம், எகனுமிக் ரென்ட்தான் வசூலிக்கப் படுகிறது. அதில் எவ்வளவு செலவழிக்கிறோமோ, அதிலே ஒரு பகுதிதான் சப்சிடைஸ்டு ஆக வசூல் செய்து கொண்டிருக்கிறோம். அதை விடக் குறைத்து வசூல் செய்ய முடியாது. இப்போது கொடுக்கிற சப்சிடி மூன்றில் ஒரு பங்கு அளவு இருக்கிறது. இந்த வாடகை கூட அவர்கள் கொடுக்க முடியவில்லை என்றால் அவர்கள் தொழில் நடத்த முடியாது என்றுதான் கூறவேண்டும். வெளி நாடுகளில் இந்த வாடகைக்கு இந்த மாதிரிக் கட்டடம் மட்டுமல்ல, எந்த விதமான கட்டடமும் கிடைக்காது.

திரு. எம். எஸ். மணி: இந்தத் தொழில் பேட்டையில் தொழில் நடத்த காங்கிரஸ் சட்சிக்கு யார் யார் தேர்தலுக்குப் பணம் கொடுக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் முதலிடம் கொடுக்கப்படு கிறது என்ற புகார் இருப்பது உண்மையா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: முற்றிலும் தவறான புகார். யார் தொழில் செய்ய முன் வந்தாலும், அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படும்.

திரு. து. ப. அழகமுத்து: அமைச்சர் அவர்கள் 10 சத விகிதம் வாடகைதான் வசூலிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். கட்ட டம் மிகப் பெரிய அளவில் கட்டிவிட்டு அதற்கு 10 சத விகிதம் வாடகை என்று வரும்போது அதிகமாக இருக்கிறது. கட்டட அமைப்பு முறையை மாற்றி குறைந்த செலவில் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: இப்போதே இரண்டு மூன்று டைப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஏ, பி, சி, டி என்று நான்கு விதமான கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. யார் யாருக்கு எந்தெந்த விஸ்தீரணம் உள்ள கட்டடங்கள் வேண்டுமோ அதை எடுத்துக் கொள்ளலாம். இதை விடக் குறைவான செலவில் கட்டினால், ஃபாக்டரி சட்டத்திற்கு உரியதாகவும், தொழில் நடத்து வதற்குப் போதிய வசதி உள்ளதாகவும் இருக்காது.

* 319 **கேள்வி.—திரு. சீ. சிவசுப்ரமணியன்:** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதி லளிப்பாரா—

1965-66-ம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் எந்தெந்த இடங்களில் தொழிற்பேட்டைகள் நிறுவும் உத்தேசம் அரசாங்கத் தின் பரிசீலனையிலுள்ளது ?